# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 72 — 1973 අගෝස්තු 10 වැනි සිකුරාදා — 1973.08.10

72 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 311 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. ... | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | 314 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விறபனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 312 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. ... | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 315 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### விடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம்

1973 ஆம் ஆண்டு மே மாதம் 2 லன்று நடைபெற்ற கூட்டமொன்றில் தேசீய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

கா. பி. விக்ரமநாயக,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 26 ந் உ.

தீர்மானம்

(268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் 3 (அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இச்சபையானது இதனோடுள்ள அட்டவணையில் வரைவிலக்கணங் கூறப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் முற்கூறப்பட்ட கட்டளைச்சட்டம் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதியிலிருந்து வலுவிலிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

### அட்டவணை

தம்பதேனிய

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதேனிஹாத் பற்றுவில், உடுகஹ கோறளை மேற்கிலுள்ள புஸ்கலதெனிய, அத்துறுவல உதியவல, நிலிகல, தம்பதேனிய ஆகிய கிராமங்களில் அமைந்துள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான பிரதேசத்தின் பகுதி அனைத்தும் :—

வடக்கு : நாரம்மலை–கிரியுல்லை அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்கு மேற்கே 175 யார் தூரத்திலும் தம்பதேனிய பிஹல்பொல அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்கு வடக்கே 100 அடி தூரத்திலுமுள்ள ஓரிடத்திலிருந்து தென்கிழக்கு நோக்கி 350 யார் தூரம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து சொல்லப்பட்ட நாரம்மலை–கிரியுல்லை அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குக் கிழக்கே 175 யார் தூரத்திலும் அதற்குச் சமாந்தரமாகவும் தெற்கு நோக்கி அளவை–மகரகமை அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்கு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

---

வடக்கே 150 யார் தூரத்திலும் அதற்குச் சமாந்தரமாகவும் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்; அங்கிருந்து கிழக்கு நோக்கி அதே கோட்டின் தொடர்ச்சியில் சமாந்தரமாகவும் 150 யார் தூரத்திலும் சொல்லப்பட்ட அளவை–மகரகமை அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக ½ மைல் இலக்க மதகின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி 300 யார் தூரம் வரையுள்ள அதே கோட்டின் தொடர்ச்சியினால்;

தெற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து சொல்லப்பட்ட அளவை–மகரகமை அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குத் தெற்கே 150 யார் தூரத்திற்கும் அதற்குச் சமாந்தரமாகவும் மேற்கு நோக்கியும் புஸ்கலதேனியக் கிராமத்தின் (மம்பதேனியக் கிராமச்சபையின்) மேற்கெல்லையைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

மேற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட கிராம எல்லையோரமாக சொல்லப்பட்ட நாரம்மலே–கிரியுல்லே அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் மேற்கே 175 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும் ஓர் இடம் வரைக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி அதற்குச் சமாந்தரமாகவும் 175 யார் தூரத்திலும் வட எல்லை ஆரம்பிக்கும் இடத்தைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

8–515—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

**பண்டத்தரிப்புப் பட்டினம்—யாழ்ப்பாண மாவட்டம்**

பின்வரும் விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக :—

(1) திரு. க. நல்லைநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ;

(2) திரு. எம். நடராசா, காரியாதிகாரி, வலி தென் மேற்கு, சண்டிலிப்பாய் ;

(3) திரு. கே. இராசரத்தினம், உதவி நில அளவை அத்தியட்சகர், நில அளவைக் கந்தோர், யாழ்ப்பாணம்,

ஆகிய மூவரையும் கொண்ட உத்தியோகபூர்வமான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

1. பண்டத்தரிப்புப் பட்டினத்தின் தற்போதைய எல்லைகளுக்கு அருகில் இருக்கும் பகுதியில் எவற்றையாவது அவற்றின் வருமானம், அவற்றில் வருங்காலத்தில் செய்யவேண்டிய அபிவிருத்தி வேலைகள் முதலியவற்றை நோக்கி இப்பகுதிகளைப் பண்டத்தரிப்புப் பட்டினப் பகுதிக்குள் சேர்க்கப்படவேண்டுமா? அப்படியாயின் புதிதாகச் சேர்க்கபடும் பகுதியின் எல்லையை நிர்ணயித்தல்.

2. சனத்தொகை, வாக்காளர் தொகை முதலியவற்றைக் கொண்டு இவ்வட்டாரங்களைத் திரும்பப் பிரிக்கப்படவேண்டுமா என்றும் அப்படியாயின் அவற்றின் எல்லைகள் நிர்ணயித்தல்.

இவை பற்றி தங்கள் அபிப்பிராயங்களைக் கூற விரும்பும் ஸ்தாபனங்கள், பொதுமக்கள் தங்களது அபிப்பிராயங்களை முப்பிரதிகளில் 73.8.25 ந் திகதிக்குப் பிந்தாது யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் எழுத்துமூலம் அனுப்பி வைத்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. நல்லைநாதன்,
உத்தியோக பூர்வமான தலைவரும்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
செயலகம்,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண் யூலை மீ 27 ந் உ.

8–501—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

# துணை விதிகள்

**பண்டாரவளைப் பட்டினம்**

நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 130 (ஆ), 153 ஆகிய பிரிவுகளின் கீழ் பண்டாரவளைப் பட்டினத்து விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச்சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணைவிதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண் யூலை மீ 13 ந் உ.

**துணை விதி**

இதற்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வளவுகள் (255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 130 (ஆ) ஆகிய பிரிவின்கீழ் அறவிடப்படுவதும் 22.12.72 இன் 39 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதும் 9.12.1972 ஆகிய தேதியைக் கொண்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டதுமான 1973 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட வளவுகள் :—

1 ம் வட்டாரம்

பதுளை வீதி இல. : 250/8பீ, 282/21.
பன்சல வீதி இல. : 50/1.
பூனகல வீதி இல. : 45/1, 45/2, 45/3, 45/4, 45/7, 45/8, 45/9, 45/10, 45/11, 45/12, 55, 55/2, 55/3, 55/4, 55/5, 55/6, 55/8, 55/9, 55/10.

3 ம் வட்டாரம்

பன்சல வீதி இல. : 17, 17/1, 17/2, 23, 23/1, 25.

4 ம் வட்டாரம்

பேரைரா வீதி இல. : 10/1, 10/2.
வெலிமடை வீதி இல. : 39/1, 41, 41/1, 41/1ஏ, 41/1பீ, 41/2, 41/3, 41/4, 45, 45/4, 55.

5 ம் வட்டாரம்

எற்றம்பிற்றிய வீதி இல. : 10, 10/1, 10/2, 10/3, 10/4, 10/7, 10/8, 16, 18, 20, 24, 24/1, 24/2, 24/3, 24/6, 24/7, 24/9, 26, 26ஏ, 28, 30, 32, 32/1, 32/3, 40, 44, 48, 52.

6 ம் வட்டாரம்

தர்மபால மாவத்தை இல. : 48.

8–517—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

**கிராமசபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ம் அத்தியாயமான) கிராமசபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டி கிராம சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் தமக்குரித் தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. சிறீவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு

துணைவிதிகள்

**கிராமச் சந்தைகள்**

1. சபையினால் நிறுவப்பட்ட எதேனும் கிராமச் சந்தை ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு மைல் ஆரையைக் கொண்ட வட்டாரத்திற்குள் இருக்கும் பிரதேசம் அத்தகைய ஒவ்வொரு சந்தைக்குமான சந்தைப் பிரதேசமாக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

கொண்டு திரிந்து விற்போர்

2. (1) எந்த ஆளேனும் தலைவரால் அதன் சார்பில் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரமொன்றின் பேரிலன்றி கொண்டு திரிந்து விற்கும் ஒருவரின் வியாபாரத்தை ஆரம்பிக்க அல்லது கொண்டு நடத்தக்கூடாது.

(2) (1) ம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றும் தலைவரால் முன்கூட்டியே நீக்கஞ் செய்யப்பட் டிருந்தாலன்றி அது வழங்கப்பட்டதற்குரிய ஆண்டின் திசம்பர் மாதத்து முப்பத்தோராம் தினத்தன்று காலாவதியாகும்.

3. இத்துணை விதிகளில்—

"தலைவர்" என்பது சபைத்தலைவர் எனப் பொருள்படும், அத்துடன் "சபை" என்பது திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டி கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப் பொருள்படும்.

8-506—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள அம்பகமுவ தெற்குக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு சொல்லப்பட்ட பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஜே. பீ. விக்கிரமநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 24 ந் டெ.

துணைவிதிகள்

சந்தைகள், கடை வீதிகள் ஆகியவை சம்பந்தமாக கண்டி மாவட்டத்திலுள்ள அம்பகமுவ தெற்குக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகளின் 1 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்கு மஸ்கேலியப் பட்டினக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள கிராமங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளுக்குள் உள்ள பிரதேசமாதல் வேண்டும் :—

வடக்கு : மஸ்கேலிய–மவுசகல்லை தென் கரை வீதியினதும் பிரவுண்லோ தோட்ட வீதியினதும் மத்திய கோடுகளை ஊடறுப்பதும் மஸ்கெலிய மவுசகல்லை தென் கரை வீதியின் மத்திக்கு வடக்கே 15 சங்கிலி தூரத்தில் செங்குத்தாக அமைந்துள்ளதுமான இடத்திலிருந்து கிழக்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் மஸ்கெலிய–மவுசகெல்லை தென் கரை வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 15 சங்கிலி தூரத்திலுள்ள நீரோடையின் மத்திய கோட்டிலுள்ளதும் சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோடு சொல்லப்பட்ட நீரோடையை 41′ 0″ நீளமுள்ள புதிய பாலம் கட்டப்பட்டிருக்கும் இடத்தடியில் ஊடறுப்பதுமான இடத்தைச் சந்திக்கும் வரை ; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி ஒரு கற்பனைக் கோட்டினூரமாக மஸ்கெலிய–அட்டன் அ. க. தி. வீதியின் மத்திய கோட்டினை 11 ஆம் மைல் கல்லுக்கருகாமையில் சந்திக்கும் வரை ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட அ. க. தி. வீதியின் மத்திய கோடு வரை வரையப்பட்ட ஒரு செங்குத்தான கோட்டில் 15 சங்கிலி தூரத்திலுள்ள ஓரிடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தென்கிழக்கு நோக்கி ஒரு கற்பனைக் கோட்டின் ஓரமாக தோட்ட வீதியொன்றில் தோட்டத்துக்குச் செல்லும் பாதையை முறையே தேயிலை சேகரிக்கும் நிலையம், தோட்டக் கடை என்றழைக்கப்படும் 155, 156 ஆகிய இலக்கங்களைக் கொண்ட குடிசைகளுக் கருகில் சந்திக்கும் சந்தியின் மத்தி வரை ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி ஒரு கற்பனைக் கோட்டின் ஓரமாக மஸ்கெலியத் தோட்ட வீதி மஸ்கெலியத் தோட்டத் தேயிலைத் தொழிற்சாலைக்குச் செல்லும் வீதியுடன் இணையும் சந்தி வரை ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி ஒரு கற்பனைக் கோட்டின் ஓரமாக மஸ்கெலிய–சாமிமலை அ. க. தி. வீதியிலுள்ள 1 ஆவது மைல் கல்லுக்கருகாமையில் சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோடு வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடமேற்கு நோக்கி மஸ்கெலிய–சாமிமலை அ. க. தி. வீதியின் மத்திய கோட்டினூரமாக மஸ்கெலிய ஓயாவுக்குச் குறுக்காகவுள்ள 90 அடி நீளமான புதிய பாலத்தின் தெற்கு வாயிலைச் சந்திக்கும் வரை ; அங்கிருந்து மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் மஸ்கெலிய ஓயாவின் ஓரமாகவும் மஸ்கெலியாக் குளத்துக்குக் குறுக்காகவுள்ள செங்குத்தான கோட்டின் நீட்சியினால் சொல்லப்பட்ட குளத்தின் நீர்மட்டம் ஓரமாகவும் தென் கரை வரை மஸ்கெலிய–மௌசகல்ல வீதியின் மத்திய கோடு பிறவுண்லோ தோட்ட வீதியின் மத்திய கோட்டினை ஊடறுக்கும் இடம் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி மஸ்கெலியக் குளத்துக்குக் குறுக்காகத் தெற்கு நோக்கி அதன் தென் கரை வரைக்கும் மஸ்கெலிய–மௌசகல்ல தென் கரை வீதியின் மத்திய கோட்டினை ஊடறுக்கும் இடம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு செங்குத்தான கோட்டின் நீட்சியின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டினை ஊடறுக்கும் இடத்தைச் சந்திக்கும் வரை, அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட செங்குத்தான கோட்டின் ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை ஆரம்பிக்கும் இடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

8-373—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

### ருவான்வலைப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் ருவான்வலைப் பட்டினசபையினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஜீ. பீ. விக்ரமநாயக,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 23 ந உ.

#### பொதுச் சந்தை, முறைச் சந்தை சம்பந்தமான துணைவிதி

ருவான்வலைப் பட்டினசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத் துணைவிதிகளின் 15 ஆம் பாகத்தின் 4 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்கு, சந்தைப் பிரதேசத்துக்குள் நிறுவப்பட்டுள்ள வாராந்த முறைச் சந்தையிலுள்ள கடை அல்லது இடமொன்றினை உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சிபுரிவதற்கு உரிய ஒரு அனுமதிப்பத்திரத்தை அல்லது ஆட்சிபுரிவதற்கு உரிய ஒரு அனுமதிப்பத்திரத்தை அல்லது சீட்டை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் 1973 சனவரி 1 ந் திகதியிலிருந்து பின்வரும் உரிமக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும் :—

(அ) கடை, வாங்கு அல்லது அறை ஒன்றுக்கு—

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (1) 50 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து.. .. | 1 50 |
| (2) 50 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 3 0 |
| (3) 100 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 150 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 4 50 |
| (4) 150 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 200 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 6 0 |
| (5) 200 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 250 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 7 50 |
| (6) 250 சதுர அடிக்கு மேற்படுமிடத்து—மேலதிக ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 0 5 |

(ஆ) வாராந்த முறைச் சந்தையில் கட்டடங்களுக்கு வெளியேயுள்ள தள இடத்துக்கு—

| | |
|---|---|
| (1) 8 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து.. .. | 0 15 |
| (2) 8 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 12 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 0 25 |
| (3) 12 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 16 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 0 40 |
| (4) 16 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 48 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 0 60 |
| (5) 48 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 60 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 1 0 |
| (6) 60 சதுர அடிக்கு மேற்படுமிடத்து—மேலதிக ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 0 5 |

8-372—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

## வரவு செலவுத் திரட்டுக்கள்

### காத்தான்குடிப் பட்டின சபை

1973 ஆம் ஆண்டுக்கான முதலாவது உப வரவு செலவுத் திட்டம்

#### பகுதி I—பொது

| செலவுத் தலையங்கம் | | தொகை ரூபா | சபைத் தீர்மான இலக்கமும் அதிகாரமும் திகதியும் |
|---|---|---|---|
| டி.2சி.. | களஞ்சியம் .. | 6,000 .. | 28.2.73 இன் 24 வது தீர்மானம் |
| ஈ2 .. | பராமரித்தல் .. | 1,500 .. | 28.2.73 இன் 24 வது தீர்மானம் |
| ஏ2டி.. | வரி மதிப்பாளர் கட்டணம் | 5,000 .. | 28.2.73 இன் 24 வது தீர்மானம் |
| ஈ8 .. | பகிரங்க வரவேற்பு | 1,000 .. | 4.4.73 இன் 2 வது தீர்மானம் |
| சீ4 .. | பராமரிப்பு .. | 2,000 .. | 29.6.73 இன் 16 வது தீர்மானம் |

ஏ. எம். எம். இப்ருகீம், ஜே.பி.,
தலைவர்,
பட்டின சபை, காத்தான்குடி.

பட்டின ஆட்சி மன்றப் பணி மனை,
காத்தான்குடி,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 18 ந உ.

8-400—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

### காத்தான்குடிப் பட்டின சபை

பட்டின சபைகள் நிதிப் பிரமாணம் 40 (11) ன் கீழ் முதலாவது விண்ணப்பம்

#### வரவு செலவுத் திட்டம்—1973

28.2.1973 இல் நடைபெற்ற கூட்டத் தீர்மான இலக்கம் 25 இன் பிரகாரம் ஒதுக்கிய வாக்குப் பணத்தில் இருந்து பின்வருமாறு சேமித்த தொகையை தொடர்பான மற்றைய வாக்குகளில் தேவைப்படும் மேலதிகத் தொகைக்கு பின்வரும் கிரமப்படி ஈடு செய்தற் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பகுதி I—பொதுச் செலவுகள்

| சேமிப்பு | | ரூபா | மேலதிகத் தேவை | | ரூபா |
|---|---|---|---|---|---|
| பி2 .. | பராமரித்தல் .. | 8,750 | ஈ2 .. | பராமரித்தல் .. | 8,750 |

ஏ. எம். எம். இப்ருகீம் ஜே. பி.
தலைவர்,
பட்டின சபை,
காத்தான்குடி.

பட்டின ஆட்சி மன்றப் பணிமனை,
காத்தான்குடி,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந உ.

8-401—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

# நானாவித அறிவித்தல்கள்

**வாடகைச்சபை—அகங்கம**

அறிவித்தல்

வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் 1972, மே, 20 ஆம் தேதிய 15,011/4 ஆம் இல. அதிவிசேட அரசாங்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இல. வாடகைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழும், 46 (2) (ஈ) பிரிவின் கீழும் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் 3 ஆம் ஒழுங்கு விதிக்கிணங்க, 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இல. வாடகைச் சட்டத்தின் நோக்கத்திற்காக அகங்கம வாடகைச் சபைக்கு சகல விண்ணப்பங்கள் அனுப்பப்படும் முகவரியும், அத்தகைய விண்ணப்பங்களின் விசாரணைக்காக சபையின் அமர்வுகள் நடாத்தப்படும் இடமும் பின்வருமாறு என இத்தால் நான் அறிவிக்கின்றேன் :

வாடகைச்சபை,
பட்டினசபை அலுவலகம்,
அகங்கம.

பியதாச குணவர்த்தன,
தலைவர்,
வாடகைச்சபை, அகங்கம.

பட்டினசபை அலுவலகம்,
அகங்கம,
1973 ம் ஆண்டு யூலை மீ 25 ந் உ.

8–514—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

**மண்டைதீவு கிராமசபை**

உள்ளூரதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்

(261 ம் அத்தியாயமான) உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து மண்டைதீவு கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 15,001 ஆம் இலக்க 10.3.72 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நியமத் துணை விதிகளின் பாகங்கள் 1, 2, 3 ம் இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று மண்டைதீவு கிராமசபை (261 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், இத்தால் தீர்மானிக்கின்றது.

க. கைலாசபிள்ளை,
தலைவர்,
மண்டைதீவு கிராம சபை.

கிராமசபை அலுவலகம்,
மண்டைதீவு,
1973 ம் ஆண்டு யூலை மீ 11 ந் உ.

8–586—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.